1151

1151 / 1.57

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - MAR 1957
MADRAS

முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

கிழமைப் பதிப்பு] [வெள்ளிக் கிழமையில்

ஆசிரியர்: இளவழகனார்

கிளை	துன்முகி, தை 12உ.	தளிர்
9	25-1-'57	15

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

உள்நாடு ரூ. 4 0 0
வெளி நாடு ரூ. 6 0 0
தனித் தாள் ரூ. 0 1 0
ஆயுள் -
கையொப்பம் ரூ. 100 0 0

முகவரி:

குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்;
தமிழ்நாடு.

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

தலையாய அறம்

புலனடக்கம் உடையோர் பொதுவாக ஒழுக்க முடையவராகவே இருப்பர்; பிறர் நலங்களை மதித்தும் நடந்துகொள்வர்; பிறரால் நேரும் இடர்களை ஓரளவு பொறுத்துக் கொள்ளுதலும் உடையவர்; இவற்றை யெல்லாம் திருவள்ளுவர், மூன்று நான்கு அதிகாரங்களாகவே தொடர்பாக விளக்கி வருகின்றார்.

பிறரால் நேரும் இடையூறுகள் பொறுக்கலாகாதவையாயிருந்தால், இல்வாழ்வோர் பொறுப்பது எப்படி என்று இங்கே கேட்கத் தோன்றும்; பொறுப்பது மட்டுமன்று, பொறுத்து மற்று உதவவும் வேண்டும், இதுதான் தலையான கடமை என்கின்றார் திருவள்ளுவர். இதைத்தான் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கின்றது.

இதற்காக ஆசிரியர் ஓர் உவமை தருகின்றார்; ஒருவர் அல்லது பலர், நண்பர் அல்லது பகைவர், அயலார், கையால் அல்லது கருவிகளால், சிறிது அல்லது மிகுதியாய்க் குடைந்து அகழ்ந்தாலும் நிலம் பொறுத்துக்கொள்கின்றது; அகழ்வார்க்குத் தீங்கியற்றுவதில்லை, தாங்கியுங் கொடுக்கின்றது; காரணம், ஆற்றல் மிக்கதாயிருக்கின்றது; அகழ அகழப் பின்னும் எங்கும் மண் உடையதாய், நிலையில் திரியாது திகழ்கின்றது. துகில் உரிய உரியத் துகில் பெருகிக்கொண்டேயிருக்கும் நிலையில் இடர் ஏது?

அப்படிப் பிறரால் நேரும் இடையூறுகளைப் பொருள் செய்ய வேண்டியிராத மாபெரும் வாழ்வாய், இல்வாழ்க்கை, உரமும் தகுதியும் எல்லா வகையிலும் பெற்றிருந்தால், பொறுக்கலாகாதவை என்பது ஏது? பொறுத்து உதவுதலும் கூடும்.

ஆற்றலும் இனிமையுமுள்ள வாழ்க்கையில் வாழத் தெரிந்து கொள்ளுதலன்றோ முதன்மை!

— இ. அ.

அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல—தன்னைக் குத்தியும் வெட்டியும் தோண்டுவாரை உள்ளே விழாதபடி தாங்கியுதவும் நிலத்தைப்போல், தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை—தம்மை இகழ்ந்து இன்னல் செய்வாரைப் பொறுத்துதவுதல் உலகில் வாழ்வோர்க்கு உயர்ந்த கடமை.

அகழ்தல் என்றார், துயருறுத்துதலுந் தோன்ற; தாங்குதல் உவமத்திலும் பொறுத்தல் பொருளிலும் வந்தன, இரண்டும் பொறுத்துத் தாங்குதன் முறைமையுடையன என்றற்கு. அகழ்வார் இகழ்வார் பொதுவில் பன்மையாய் வந்ததனால், பகைவரையும் பலரையும் கருதியபடியாம்.

நிலம்போல என்னும் உவமை, உவமவுருபுடன் வெளிப்படையாக வந்தது, அவ்வளவு சிறப்பாகப் பொறுத்தலும் தாங்கலும் வேண்டும் என்பதற்கு. தலை என்றார், அதன் அருமை தோன்ற.

இகழ்தல், வெறும் புறக்கணித்தல் மட்டுமன்று, தீங்கியற்றலுங் கருதியதென்பது உவமையாற் பெறப்படும்.

வம்மின் உலகீர்! வம்மின், வம்மின்; வம்மின் வள்ளுவர் தொண்டுகள் செய்வோம்!

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

—புறநானூறு.

முல்லைக் கொடி

கிளை 9	துன்முகி, தை 25-1 57	தளிர் 15

திரு. ச. மு. பிள்ளை மறைவு

உலகின் பல்வேறு பகுதிகளில் எங்கெங்குத் தமிழரசியின் ஆட்சி உண்டோ அங்கெல்லாம் தமிழ் மொழியின், நாள், திங்கள் கிழமையிதழ்கள் வாயிலாகத் தமிழ் மாந்தர்க்கு அறிமுகமாகி வாழ்ந்தவரும், அவர்கள் உள்ளத்தில் என்றும் குடிகொண்டிருப்பவருமான தமிழறிஞர் திரு. ச மு. பிள்ளையவர்கள், தென் ஆப்பிரிக்கா டர்பன் மாநகரில் சென்ற நவம்பர்த்திங்கள் 10ம் நாளன்று தம் ஐம்பத்து மூன்றும் ஆண்டில் எழுத்தறியும் பெருமான் இணையடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டுத் தமிழ் மாந்தர் உள்ளம் நைந்தனர். தமிழ் பேசும் நல்லுலகமே கண்ணீர் சிந்திக் கலங்கியது.

இலங்கைச் செழுந்தீவில் திரு. சங்கரன் பிள்ளை தம்பதிகட்கு 14-4-1903ல் தவமைந்தராகத் தோன்றிய திரு ச. முனிசாமி பிள்ளையவர்கள் தம் வாழ்விற் பெரும்பகுதியையும் தென்னாப்பிரிக்கா டர்பன் மாநகரிலேயே கழிக்கலானார். பிறந்து மொழி பயின்ற நாள் தொடங்கி நம் பிள்ளையவர்கள் தமிழ் மொழியின்பால் அளப்பரிய ஆர்வம் காட்டி வந்தார். இம்மொழியார்வம் இவரிடம் இயற்கையாகக் குடி கொண்டு வளர்ந்தது. சிறுவயதில் 'விவேகபானு' என்னும் செந்தமிழ் இதழாசிரியர் சி. வி. பிள்ளையவர்களிடம் இவர்கள் பெற்ற தமிழ் மொழிப் பயிற்சி இவர் தம் இயற்கைத் தமிழார்வத்தை எண்மடங்காகப் பெருக்கியது.

உரிய காலத்தில், திருமதி ஆர். பார்வதி நாயுடு என்னும் பெயர்வாய்ந்த தம் கருத்துக்கினிய காரிகையாரை மணந்து டர்பனில் மனையறம் தொடங்கினார். இவர்களுக்கு மூன்று பெண்மக்கள் தோன்றினர். அமைதியான மனையற வாழ்வில் தமிழ் மொழிச் சேவையும் தழைத் துயர்ந்தது.

டர்பனில் வெளியிடப்பெற்ற 'செந்தமிழ்ச் செல்வன்' 'பிரசார மலர்' என்னும் இரண்டு இதழ்களுக்கும் திரு பிள்ளையவர்களே ஆசிரியராகத் திகழ்ந்தார். சுமார் பதினைந்தாண்டுகளாக இந்து தமிழ்க்கல்லூரியின் தலைவராகவும் இருந்து அதனைத் திறம்பெற நிர்வகித்து வந்தார். டர்பனில் முதன் முதலாகச் செந்தமிழ் நாட்டுக் கவிஞர் பெருமான் திரு. சுப்பிரமணிய பாரதியார் விழாவினைக் கொண்டாடி அதனை நடை முறையிற் கொணர்ந்த பெருமை, பிள்ளையவர்களையே சாரும்.

தமிழ் மொழியைத் தாம் வாழ்ந்த நாட்டிலும் வெளியிலும் பரப்ப இவர் கையாண்ட வழிகள் எண்ணிலடங்கா. டர்பனில் இவரியற்றிய எத்துணையோ தமிழ் நாடகங்கள் அந்நாட்டுச் சிறுவர் சிறுமியர் வாலிபர்களால் அழகாக நடிக்கப் பெற்றன, அந் நாடகங்களிற் குறிப்பிடத் தக்கவை மேற்றிசைக்கவி சேக்குவீயரின் 'வெனீஸ் வணிகன்.' 'சந்திர சேகரன்' 'கருணாநந்த சுவாமிகளின் வழக்கு' 'பல் வைத்தியர்' 'மறைந்த கணையாழி' 'இன்றைய வுலகு' 'யாரிடம் சொல்வது' என்பனவாகும். 'இன்னும் பலநாடகங்கள் வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன.

பிள்ளையவர்கள், தமிழ்ப்பாடசாலைகளின் கண் காணிப்பாளராகவும் இருந்து தமிழைப் புரந்துள்ளனர். இன்னும் எத்தனையோ தமிழ்க்கழகங்களுக்குத் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். சரசுவதி கழகம், பாரதி பள்ளி, தமிழ்வகுப்புக் கழகம், தமிழாசிரியர் கழகம், மாணவர் மன்றம் என்பன அவற்றுட் சில என்று கூறலாம்.

இவருடைய மாணவரிற் பலர் இன்று பல தமிழ்க் கல்லூரிகளின் தலைவராகவும் ஆசிரியராகவும் இருந்து இவர் புகழைப் பரப்புகின்றனர். இவர் பாடிய 'பாலர் பாடல்.' இவர் கவியாற்றும் திறத்தினைக் காட்டுகின்றது. இவர் செய்த 'திருமண மந்திரம்' என்னும் நூல் திருமணம் செய்தற்குரிய விதிகளை இயம்புகின்றது

இவர்செய்தநாடகங்களாவன, 'வில்விதுரன் சொல்', 'பகைவரும் நண்பரும்' 'பெயரளவில் மட்டும்' 'கடமையின் அழைப்பு' 'திருக்கோயிலில்' 'குற்றமற்றவன்' 'தற்கால வுலகு' 'திருநாவுக்கரசர்' என்பன. அவை அந்நாட்டில் மிக்கசெல்வாக்குடன்பலராலும்

(7-ம் பக்கம் பார்க்க)

சமயப் பகுதி – அருள் வலிமைக்கு

அடியார் மாட்சி

“இளம் பூரணன்”

பல ஆண்டுகட்கு முன் நான் படித்த ஆங்கிலப் பாடல் ஒன்றின் கருத்து நினைவுக்கு வருகிறது.

அபூ – பென் – ஆதெம் என்ற யூதனைப் பற்றிக் கூறுவது அச்சிறிய கவிதை.

‘ஒரு நாள் இரவில் அபூ தன் படுக்கை யறையில் உறங்கிக் கொண்டிருந்தான். காற்றோட்டமான அவ்வறையின் சாளரங்கள் வாயிலாகத் திங்கள், ஒளி வெள்ளத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. அமைதியாகக் கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவன் திடீரென்று விழித்துக் கொண்டான். அறையில் தவழ்ந்திருந்த நிலவின் ஒளியை மங்கச் செய்யும் இளங்கதிர்ப் பேரொளி ஒன்று அங்குத் தோன்றியது. அவ்வொளிப் பிழம்பின் இடையில் பூத்து விளங்கும் பொன்னிறப் புது மலர்க் காட்சிபோலத் தெய்வத் திருவுரு ஒன்று தோன்றியது. அவ்வுருவம் ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் தாங்கி விரைவாக எழுதிக்கொண்டிருந்ததை அபூ கண்டு வியந்தான். அங்குத் தவழ்ந்த அமைதியான சூழ்நிலை அவனுக்குப் பேசும் துணிவை அளித்தது. “ஐய! தாங்கள் அப்புத்தகத்தில் அப்படி விரைவாக எழுதுவது யாதோ?” என்றான். அதற்கு அவ்வுருவம் “ஆண்டவன் அடியார்களின் பெயர்ப் பட்டியல் இங்கு எழுதப்படுகிறது” என்றது. அதைக் கேட்ட அபூ “அப்படியானால் என் பெயரும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா?” என்று பரபரப்புடன் வினவினான். தெய்வம், “இல்லை” என்று தலையசைத்தது. அதைக் கேட்டுத் துயருற்ற அபூ “ஐயனே! என்பெயரை ஆண்டவன் அடியாரிடம் அன்பு செலுத்தும் ஒருவனாகவாவது எழுதிக்கொள்ளுங்கள்” என்று குறைவுடன் விண்ணப்பித்தான். தெய்வம் ஏதோ எழுதி மறைந்தது.

மறுநாள் இரவு அதே வேளையில் அவ்வொளித் தெய்வம் அங்குத் தோன்றியது. புத்தகத்தில் எழுதிய அடியார் பட்டியலை அபூவிடம் காட்டியது. ஆ! என்னவியப்பு! அடியார் பெயர்கள் அனைத்துக்கும் மேலாக அபூவின் பெயர் அல்லவா எழுதப்பட்டிருக்கிறது!’

இதுதான் அப்பாடற் கருத்து. ஆண்டவன் அருளைப் பெறுவதற்குச் சிறந்ததும் எளியதுமான வழி ஒன்றே ஒன்றுதான். அதுதான் நாம் அடியார்களிடம் செலுத்தும் அன்பு. அடியாரிடம் நாம் காட்டும் பக்தியே ஆண்டவன் அருளைத் திண்ணமாக அருளவல்லது என்பதை அப்பாடல் சிறந்த எடுத்துக் காட்டினால் விளக்கியது.

நேரே ஆண்டவனிடம் அன்பு செலுத்தாமல், அடியார் திருவடிகட்கு அன்பு பூண்டொழுகி அருட் பேற்றினை அடைந்த பெரியார் பலர் வரலாறுகள் நமக்குக் கிடைத்துள்ளன. நாயன்மார்களில் அப்பூதியடிகளார் வரலாறும், ஆழ்வார்களில் மதுரகவியார் வரலாறும் இவ்வுண்மைக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

ஆண்டவன் திருவருட் செல்வங்கள் தொகுத்து வைக்கப் பெற்ற சரக்கறைகளாகத் திகழ்பவர் அடியார் பெருமக்கள். இன்னும் சொல்வதானால், வான்வழி வரும் அமிழ்தம் போன்ற நீர்த் திரளைத் தொகுத்துவைத்து கால மழை பொய்க்கும் காலத்தும் நீருதவி விளை நிலங்களைக் காக்கும் நீர்த்தேக்கங்களைப் போன்றவர் அவர்கள். இறைவனிடம் திருவருளை முற்றும்வாய்த்த அருட் பிழம்புகளாகத் திகழும் அடியார்களுக்குத் தொண்டு பூண்டு ஒழுகினால், ஆண்டவன் திருவருளை எளிதில் அடையக்கூடும் என்ற உண்மையை நம் முன்னோர்கள் உணர்த்தினர்.

‘இறைவனோ தொண்டர் உள்ளத்து அடக்கம்; தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே’ என்ற முதுமொழிகள், தொண்டர் பெருமக்கள் மாட்சிமையை எடுத்துக்காட்டுவன.

அடியாரை வழிபடும் வகையில் உண்டாகும் பெருமையைக் காரைக்காலம்மையார் ஒரு திருப்பாடலில் அழகாக விளக்கி யுள்ளார்கள்.

‘ஆண்டவன் திருவடிகளைக் காணும் பேறு அறிவாற் சிவனேயாக வாழ்ந்த மாணிக்கவாசகர் போன்ற ஒரு சிலர்க்குத்தான் கைகூடுகிறது.

அத்தகைய அடியார் பெருமக்களை எண்ணி எண்ணி நெஞ்சங்கசியும் நிறைதவச் செல்வர் பலர் இன்றும் இருக்கிறார்கள்.

இம்மாதிரி அடியார் பெருமைகளை நினைந்துருகும் அவர்தம் நிழலை எட்டி இருந்து கண்டாலே போதும்; நம் பழவினை எல்லாம் பறந்துவிடும். இஃது இப்படியானால் ஆண்டவன் திருவடிவத்தை மலர் கொண்டு வழிபடுபவர் பாவங்கள் பற்றறும் என்பதற்கு ஐயம் உளதாமோ?’ இக்கருத்து. அம்மையார்

(7-ம் பக்கம் பார்க்க)

கலைப் பகுதி — உள வலிமைக்கு (முன் தொடர்ச்சி)

தமிழர் மருத்துவக் கலை

(TAMILIAN MEDICAL SCIENCE.)

(தமிழாக்கம் சி. து. க.)

வேறு சிலர், நோய்க்குகந்த மருந்துகள் மட்டும் தெரிந்துள்ளார்கள். நோய் இன்னதென்று அவர்களுக்குத் தெரிவித்தால், அதற்குத் தகுந்த மருந்துகள் கொடுத்துநோயைப்போக்குவர்.

ஒவ்வோர் ஊரிலும் நாவித குலப் பெண்டிர் 'பிள்ளைப் பேற்று மருத்துவத்தில்' கை தேர்ந்தவர்களாக நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே பரம்பரையாக வாழ்ந்து வருகின்றனர்.

இவையே அன்றி இயற்கை மருத்துவமும் மிகப்பழைய காலந்தொட்டு நம் நாட்டில் அறிஞர்களாற் கையாளப் பட்டு வருகின்றது. திருவள்ளுவனார், பட்டினத்தார், தாயுமானார் முதலான அருட்பெருஞ் செல்வரெல்லாம் இத்தகைய இயற்கை மருத்துவத்தைப் பின்பற்றி வாழ்ந்தவராவர். இக்காரணத்தாற்றான் திருவள்ளுவர் மற்றொரு குறட்பாவில்,

'மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்'

என்கின்றார்

ஒருவன் முன் உண்டது சீரணித்த (அற்ற) வகையைக் குறிகளால் தெளிய அறிந்து பின் உண்ணுவானாயின், அவன் உடலுக்கு மருந்தென்று வேறு வேண்டா என்பது இதன் கருத்து. 'அற்றது போற்றி யுணின்' என்பது மற்றொரு பொருளையும் தரும். மருத்துவ நூல்களில் மறுத்த உணவுகளை உண்ணாது, விதித்த உணவுகளை உண்டால் நோய்கள் உடலை நலிய மாட்டா என்பதனையும் அஃதுணர்த்தும்

எடுத்ததற்கெல்லாம் மருந்துண்ணும் பழக்கம் பழங்காலத்தில் பெரும்பாலும் வெறுக்கப் பட்டது. இயற்கை மருத்துவமே அனைவரும் விரும்பிப் போற்றினர்.

பிற்காலத்தில் நமக்குக் கிடைத்த மருத்துவ நூல்கள் தேரையர் நூல்களாகிய கரிசல் திரட்டு 3000; பதார்த்தகுண சிந்தாமணி என்பன, கொங்கணவர் நூல்கள், புலிப்பாணி வைத்தியம், அகத்தியர், திருமூலர், இடைக்காடர், கருவூரார் கஞ்சமலைச் சித்தர், பொதிய மலைச் சித்தர் ஆகியவர் நூல்கள் முதலியனவாகும்.

சித்தர்கள் பெயர்களைத் தாங்கிய பலநூல்கள் இக்காலத்து உலவுகின்றன. அவை பெரும்பாலும் போலிகள். ஒதுக்க வேண்டியவை.

தேரையர், அகத்தியர், திருமூலர், கருவூரார் ஆகிய சித்தர் நூல்களெல்லாம் இலக்கியப் பெருமை வாய்ந்தவை.

தமிழ் மருத்துவ நூல்களில், மருந்துகள் கண்டுபிடிப்புக்கு முதன்மையான காரணங்கள் பின்வருமாறு காட்டப் பெறுகின்றன.

முதற் காரணம்:—

அக்கால மக்களுக்கு 'இரசவாதம்' (உலோக மாற்றங்கள்) செய்தலில் இருந்த ஆர்வமே மருந்துகள் தோற்றத்துக்குக் காரணம். இரசவாதிகள் விலைகுறைந்த சாமானியஉலோகங்களைப் பொன்னாக மாற்றுவர். 'ஜோஸ்யம்' வான நூலாராய்ச்சியின் முற்றாத இளம்பருவமாக இருத்தல் போல, இரசவாதம், இரசாயனக் கலையின் இளம்பருவமாக இருந்து வருகிறது.

செம்பு முதலிய சாமானிய உலோகங்களைப் பொன்னாக மாற்றுவதற்கு முதன்முதலாக அவைகளைத் தூய்மைப்படுத்த வேண்டும். தூய்மைப் படுத்துவதற்குப் பல வழிகள் கையாளப் பட்டன. பலமுறை அவைகளைத் தீயில் இட வேண்டியிருக்கும். தீயில் இடுவதற்குப் **புடம் இடுதல்** என்று சொல்லப் படுகிறது. அங்ஙனம் புடம் இடுவதிலிருந்து அவர்களுக்கு **நீறு** அல்லது **பஸ்மம், கட்டு** அல்லது **மணி** என்பவை கிடைக்கின்றன.

இவ்வகையில் அவர்கள் 1 நீறு, 2 செந்தூரம் 3 மாத்திரைகள் 4 கட்டு என்பனவற்றைச் செய்தற்கு முடிந்தது. இவைகளே சித்த மருத்துவத்தின் முதன்மையான இயல்புகளாகும்.

சித்தர்கள் சிறப்புவாய்ந்த இரசவாதிகளாகத் திகழ்ந்தார்கள். அப்போதிருந்த முடிவேந்தர்கள் துணையினால் அவர்கள் ஆங்காங்கும் மருந்து ஆராய்ச்சிக் கழகங்கள் நிறுவி நடத்தியும் மருத்துவ நூல்கள் வெளியாக்கியும் உலகுக்கு உதவி வாழ்ந்தனர்.

இரண்டாவது காரணம்:—

ஒரு காலத்தில் சில மூதறிஞர்கள் பொதிய மலையில் குழுமியிருந்து, உடலுக்கு வரக்கூடிய பிணிகளைப் பற்றி நீண்ட ஆராய்ச்சி செய்தனர்.

(வரும்)

102 நச்சுளக்கொடியன் -- நஞ்சினை ஒத்த நெஞ்சினையுடைய கொடியவன், இருங்கடல் -- கருநிறக்கடல்.

104 தக்கபெற்றி -- தகுதியான விதத்தில், நவ்வி -- மான், அவ்வியம் -- குற்றம்.

105 ஆலம் -- விஷம், மேலும் ஓர் செயல் -- அழித்தல், சீலம் -- பெருமை.

106 பொறுத்தி -- பொறுத்தருள்க.

107 கறை -- குற்றம்; உறையுள் -- இருக்கை,

108 ஓர்ந்திடின்--ஆராய்ந்தால்; தேர்மின்--தெளியுங்கள்.

குறிப்புரை முற்றும்.

பிழை திருத்தங்கள்.

பாடல் எண்	வரி	பிழை	திருத்தம்
20	8	முரணிலாள்	முரணிலான்
27	13	மனி	மணி
36	5	வேம்பிட	வெம்பிட
55	5	ஆவேலா	ஆவெலா
70	8	சர்ன்றவ	சான்றவ
76	3	இடத்தெரு	இடத்தெழு

60 இரும்பொழில் - பசுஞ் சோலை; வாய் மொழி - வாயாற் கூறத்தகுந்த உபசார மொழிகள்.

61 வறியன் - ஏழை; அதிதிகள் - விருந்தினர்; அணை - ஆதனம்; தொழுதனன் இருத்தி - தொழுது அமர்த்தி (முற்றெச்சம்).

62 வடமீன் - அருந்ததி; துறக்க நல்லமிர்தம் - தேவ லோகத்து நல்ல அமிர்தம்; துறுசுவை - மிக்க சுவை.

63 சேயவர்-செம்மையானவர்; சாலை-இடம்· அன்பின் - அன்போடு.

64 பொருப்பென - மலை போல.

65 எழிலணை - அழகிய படுக்கை.

66 சிங்கவேறு-ஆண்சிங்கம்; பைதலில்-குற்றமில்லாத; செவ்வே - செம்மையாக; பைபய - மெல்ல மெல்ல.

67 காரி - கரிக்குருவி; சுரும்பர் - வண்டுகள்; வியன் - பெரிய.

68 மறுகிட - குழம்பிட.

69 கொதிப்பினன் - கோபமுற்றவனாய்.

70 ஏம்பல் - துன்பம்; சாம்பினான் - வாடினான்.

71 நெருப்புடன் - கொதிப்புடன்; துனைந்து-விரைந்து.

72 மான - ஒப்பாக; எஞ்சும் - பின்னிடுகின்ற; இன்னலன் - துன்பமுற்றவனாய்; மஞ்சன்-மைந்தன்; நடையாற்றினான் - செல்லலானான்.

73 ஆணை – கட்டளை; சேவகன் – வேலையாள்.

74 மழுங்கிட – தோற்பதாக; மாய்ந்தது – மறைந்தது.

76 சிரல் – மீன் கொத்திப்பறவை.

77 ஊறியசிந்தை – ஆழ்ந்த நினைவு.

78 தீர்வுஇலா – முடிவுஇல்லாத; மூவரும் – உம்மை; முற்றும்மை.

79 கூடு நண்பன்–வந்து சேர்ந்த நண்பனுன வழிகாட்டி.

80 வெம்பினுன் – கோபித்தான்; மையலாய் – அறிவில் லாதவனே; புலந்து – மனம் நொந்து.

81 செவ்விய – செம்மையான; ஒண்கலம் – ஒளிபொருந் திய பாத்திரம், கவ்வினை எடுத்தனை – களவாடினை; கரவு பூண்டனை – திருட்டுத் தொழிலில் இறங்கினை.

82 பூதம் – பிசாசு; இயற்றினுய் கொலாம் – செய் தனையோ.

83 விடர் – நிலப்பிளவுகள்; வேய் – மூங்கில்; படர் – துன்பம், ஓர்கிலாய் – அறிந்தாயில்லை.

84 கசிவு – இரக்கம்; வசை – குற்றம்; பசை – கருணை.

85 அன்பினுன் – அன்புடைய வழிகாட்டி.

87 மதிமேலவன் – அறிவுசால் தவசி; சந்தம் – சந்தனம் தடந்தோளவன் – விசாலமான தோள்களையுடைய இளைஞன்.

88 தள்ளாத–ஒழியாத; ஒண்கேழ் – ஒளியார்ந்த நிறம், விள்ளா – வெளியிட்டு, வியன் – பெரிய.

89 சீரார்......மயில் – பசுமை நிறம் வாய்ந்த இறைவி, பேணி – விரும்பி.

90 எல் – கதிரவன்; மல்லல் – வளம்; நைந்திட–வருந்த.

91 பசும் பொன் – உமாதேவியார்; பண்புத்தொகை யன்மொழி, புலவர் – தேவர், ஏழைபங்கன் – எளியவர்க் குத் துணை செய்யும் இறைவன்.

92 ஆடகம் – பொன்; வீடிட – ஒழிய.

93 தண்ணிலாச் சடைக்குன்றவில்வானவன் - குளிர்ந்த நிலாவைச் சூடியசடையும், மேரு வில்லையும் உடைய இறைவன்.

94 உய்தல் இல் – தெளிவு இல்லாத.

95 குதுகலம் – மகிழ்ச்சி.

96 புதுமதி – தெளிந்த அறிவு; ஏகம் – தனிப்பட்ட.

97 பிறங்கிய–விளங்கிய; பொலங்கலம்–பொற்கிண்ணம்; சிறியவன் -- உலோபி.

98 தேமனம் -- இனியமனம்.

99 பொற்பின் -- சிறப்பினையுடைய.

100 மன்னியபாசம் -- நிலைபெற்ற பற்றுதல்; அச்செயல் -- குழவியின் ஆவிகவர்ந்த அச்செயல்; உறுபவச்செயல் -- மிக்க பிறவிச் செய்கைகள், கடிந்தேம் -- ஒழித்தோம்.

தொழில் பகுதி — உடல் வலிமைக்கு

உழவு

(முன்தொடர்ச்சி)

— முத்து. வடிவேல் —

இதற்கு அங்குப் பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் அறிவுள்ளவர்களாக இருப்பதுதான் காரணம். ஒற்றுமை உணர்ச்சி அறிவு வளர்ச்சி ஆகியவற்றின் துணையுடன் நம் நாட்டில் கூட ஒவ்வொரு கிராமங்களையும் கூட்டுப் பண்ணைகளாகச் செய்து நிலங்களை ஒன்றாக்கி இயந்திரங்களைக் கொண்டு உழுது விளைவை அதிகமாக்கலாம், ஆனால் இது நம்நாட்டில் இயலுமா? காலம்தான் இதற்கு விடை கூற வேண்டும்.

இயந்திரங்களைக் கொண்டு உழ இயலவில்லையாயினும் இரும்புக் கலப்பைகளைக் கொண்டாவது ஆழ உழுது பயிர்செய்ய முற்படவேண்டும்.

அடுத்துக் கவனிக்க வேண்டியது உரம், மாட்டின் கழிவுப் பொருள்களையும் குப்பை கூளங்களையும் கொண்டு தயாரிக்கப்படும் ‘‘கம்போஸ்ட்டு’’ உரமே யாவற்றிலும் சிறந்ததாகும். சூரிய வெப்பம் தாக்காத இடங்களில் சுமார் ஐந்து அல்லது ஆறடி குழிகளை வெட்டி அதில் குப்பை கூளங்களுடன் மாட்டின் கழிவுப் பொருள்களையும் வண்டல் மண்ணையும் கலந்து நிரப்பிப் போதுமான அளவு மயில்துத்தக் கரைசலையும் தெளித்து மூட்டுப் போடவேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் உரமே சிறந்த உரமாகும்.

ஆனால் நம்நாட்டில் இவ்வாறு கவனித்து எரு தயார் செய்யப்படுகின்றதர்? இல்லை. காரணம் மக்களின் அறியாமையே.

பசுந்தாளுரம் நிலவளத்திற்கு ஏற்றதாகும். பூவரசு, காட்டு வாழை, வேம்பு, முதலிய மரங்களின் தழைகளையும், கிளைரிசீடியா எருக்கு, சணம்பு, தக்கைப் பூண்டு முதலிய செடிகளின் தழைகளையும் சேகரித்து நிலத்திற்கு இடுவதால் நிலத்தின் தரம் உயர்கிறது. நம் முன்னோர் பசுந்தாளுரத்தையே அதிகமாகப் பயன்படுத்திப் பலன் மிகுதியாகப் பெற்று வந்தனர். ஆனால், தற்காலம் தழையுரத்தின் மேன்மையறியாத மக்கள் பிண்ணாக்கு அமோனியம் சல்பேட் ஆகிய செயற்கை உரங்களை அதிக பொருட் செலவில் வாங்கிப்பயன்படுத்துகிறார்கள்.

இதனால் செலவு அதிகமாகித் தாம் செய்த பயிரில் ஒரு தடவையே பலன் காண்கிறார்கள். அடுத்து நிலத்தின் தரம் மிகவும் குறைந்து விடுகிறது. இதை விடுத்து நல்ல எருக்களையும் தழையுரத்தையும் குறைந்த செலவில் பயன்படுத்தி அதிகப் பலன் காண வேண்டியது மிக மிக அவசியமாகும். இயற்கை உரத்தின் அவசியத்தைப் பற்றி வள்ளுவர்பெருமானும்

ஏரினும் நன்றால் எருவிடுதல் [கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

— குறள்.

முதலாவதாக நிலத்தை நன்றாக உழுவது முக்கியமானது. இரண்டாவதாக எருவிடுதல் மிகமிக அவசியம். இப்பொருளை ஒரே அடியில் ‘‘ஏரினும் நன்றால்’’ என்று உயர்வு சிறப்பும்மை கொடுத்துக் கூறியுள்ளார். பயிர்முளைத்து வளரும் போது அதன் வளர்ச்சிக்குத் தடையாக உடன் வளரும் களைகளை நீக்க வேண்டியது முதன்மை. அடுத்துச் செய்ய வேண்டிய இக் கடமையைக் ‘கட்டபின்’ என்ற சொல் விளக்குகிறது.

அடுத்து நீர்வளம் மிக முக்கியம். நீர்வளத்தைக் காட்டிலும் பயிர் செழித்தோங்கக் காப்பு மிகமிக இன்றியமையாதது. காப்பு என்பதில் பயிர்களை வேலியிட்டுக் காத்தலோடு பயிர், நோயினால் நசியா வண்ணம் காத்திலும் அடங்கும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் உழு தொழிலின் இன்றியமையாமை அனைத்தையும் முறைப்படுத்தி இரண்டடிகளில் சுருங்கக் கூறியுள்ளது அறிஞர்க்குப் பேரின்பம் பயப்பதாகும்.

இவ்வாறு உழவிற்கு இலக்கணம் வகுக்கப் பெற்று உன்னத நிலையில் இருந்த பயிர்த் தொழில் ஏனோ இன்று கீழ்நிலையில் உள்ளது. இனியேனும் தக்கோர் துணையுடன் தகுவன செய்து பிற நாடுகளைப் போல் உற்பத்தியில் முன்னணியில் நிற்க ஆவன செய்ய வேண்டியது. உழவர் கடனாகும். துணை செய்து ஊக்குவது அரசினர் கடமையும் ஆகும்,

குறைந்த நிலங்களில் பேரளவுக்கு வருவாய் கிடைக்க ஜப்பான் முறை விவசாயம் துணை செய்யும். நாடெங்கும் இது மிக விரைவாகப் பரப்பப் பட்டும் சிறந்த பலன் காணப்பட்டும் வருகிறது. இந்த முறையில் நம்மவர் மேலும் கருதி ஆவன செய்வாராக. விளை பொருள் மலையெனக் குவித்து நல்வாழ்வுடன் திகழ்வோமாக!

* * * *

மொழிப் பகுதி – அறிவு வலிமைக்கு

அழகிய பூ

(மணி)

ஒருநாள், அழகிய மலரொன்று மலர்ந்து கிடந்தது செடியிலே. கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து விட்டது அம்மலர். காற்றிலே அச்செடி அங்கு மிங்கும் அசைந்த பொழுது அதுவும் உடன் அசைந்தது. அவ்வசைவு "வாவா" என்று கொஞ்சுவது போலிருந்தது.

மென்மையான மலர் அது. மனம் அதை நாடிற்று. மெள்ள என் கையினால் அதனைக் கிள்ளி விட்டேன். அதனழகைக் கையிலே வைத்து இன்புற. அது, என் கையினில் வந்துவிட்டது, பேசாத மங்கையைப் போல. ஆனால், செடி கண்ணீர் விட்டது; ஆம், அங்கே சிறிது செடியில் தண்ணீர் இருப்பதைக் கண்டேன்.

மலரைக் கையிற் கண்ட மகிழ்விலே அதனைப் பாராது சென்று விட்டேன். அதனிடமிருந்த அழகு அத்தனையும் சிறிது நேரந்தான் என்னிடமிருந்தது. செடியில் ஆடி அசைந்த போது இருந்த அழகு என் கையினில்வந்த போது காணவில்லை. சற்றுக் குறைந்தே இருப்பதைக்கண்டேன். என் கை அசைந்த போதெல்லாம் என்கையினூடே அசைந்ததே அன்றி, 'வா, வா' என்றோ வேறு மொழி பேசவோ இல்லை. என் நெஞ்சம் மிகவும்நெகிழ்ந்து விட்டது.

அதனை விரலினால் பிடித்தபடியே சிறிது தூரம் சென்றேன். அது, தன் ஓர் இதழை உதிர்த்துவிட்டது. என் நெஞ்சில் முன்னைவிடச் சிறிது வருத்தம் தோன்றச் செய்தது.

அழகிய பூவைப் பறித்து விட்டேனே என்று என் உள்ளம் தவித்தது. வாய் இருந்ததால் அதுதன் துன்பத்தை எடுத்துரைத்திருக்குமே என எண்ணினேன். எண்ணி என்ன பயன்? அதனைத்தான் பறித்துவிட்டேனே! கண்கொள்ளா அழகுடன் மலர்ந்திருந்த அதனை செடியுடன் இணைந்து இன்பம் 'இதோ' என்று காட்சியளித்த அதனை எடுத்து விட்டேனே! செய்தது செய்ததுதான் என எண்ணினேன்.

மீண்டும் சென்று செடியைப் பார்த்தேன். அதே போன்று வேறு அழகியபூக்களும் அச்செடியில் இருந்தன. அவைகள் என்னை 'வா, வா' என்று முன்போல்கொஞ்சவில்லை. அவற்றின் அசைவு 'சே, சே என்னுடன் பிறந்த அழகிய பூவைக் கையில் பறித்துக் கெடுத்துவிட்டாயே' என்றது. இல்லை, அவை வெறுப்புடன்தான் நோக்கின!

எங்கிருந்தோ என்னுள்ளத்திலிருந்து ஓர் எண்ணம் எழுந்தது, ஆம்; அக்காலத்தில் தவசிகள் யாவரும் கீழே உதிர்ந்த மலரைத்தான் எடுத்துக் கடவுளுக்குச் சூட்டுவார்களென்று. என் மனம் இதையெல்லாம் எண்ணியது. என் உள்ளம் மிகவும் அயர்ந்து விட்டது.

பறித்த மலரைப் பார்த்துக் கொண்டே சென்றேன். எதிரே ஒரு மங்கையைக் கண்டேன். கண்களிலே நீர்துளித்திருந்தது. அம்மங்கை சென்று விட்டாள். பிறகு மலரைப் பார்த்தேன். அதனிடம் அழகு இல்லை. இதழ்கள் ஒவ்வொன்றாகச் சிந்தின. அது, தன் இரத்தத்தைக் கொட்டுவது போலிருந்தது!

பெரியவர்கள், இயன்றவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் செய்யும் அட்டூழியங்களை எண்ணினேன். என் மனம் எங்கோ சென்றது. ஆம், அம்மங்கையைச் சிலர் கெடுத்து விடுகிறார்கள்; அவள் வாழ்வைக் குலைக்கிறார்கள்; அதையெல்லாம் தம் செல்வாக்கினால் செய்ய முடிகிறது; செய்து விடுகிறார்கள். அம்மங்கைக்கேற்ற மணாளனிடம் சென்றால்... அம்மலர் அதே செடியில் இருந்தால்... எவ்வளவு அழகாயிருக்கும்.

(வரும்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போற்றி நடிக்கப் பெற்றன. இவர் இறுதிக் காலத்தில் சேக்குவீயரின் நாடகங்களிற் பெரும்பாலானவற்றையும், டால்ஸ்டாய், தாகூர் ஆகியோர் நூல்களையும் தமிழில் மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டிருந்தார். அந்தோ! அவர் கருத்து முடியா முன்னம் மறைய நேர்ந்தது.

சென்னை இதழாசிரியர் கழகத்தின் உறுப்பினராகச் சுமார் முப்பது ஆண்டுகளாக இருந்து வரும் திரு பிள்ளையவர்கள் தென் இந்தியா, சிலோன், பர்மா, மலேயா, கல்கத்தா இவற்றில் வெளியாகும் சுமார் 120 இதழ்களில் எத்துணையோ அரிய கருத்துக்களை எழுதியிருக்கிறார். இதுகாறும் இவர்தம் இதழ்ப்பணிகள் தங்குதடையின்றி நடைபெற்று வந்தன.

தமிழ்ச் சேவைக்கு அடுத்தபடி பிள்ளையவர்கள் விரும்பி வளர்த்தது பூந்தோட்டக் கலை.

உலகத் தமிழன்பர்களில் சிறந்து விளங்கிய திரு ச. மு. பிள்ளையவர்கள் மறைவு தமிழறிந்த வுள்ளம் ஒவ்வொன்றுக்கும் பொறுத்தற்கரிய துன்பம் தரவல்லது என்பதில் ஐயமே இல்லை புகழுடலோடு அவர் தமிழுள்ளங்களில் என்றும் நீங்காது வாழ்வார் என்பதிலும் ஐயமில்லை.

ஆப்பிரிக் காவில் டர்பன்
அழகுசால் நகர்வ திந்த
நாப்புகழ் வீறு சான்ற
நம்முனி சாமி யண்ணல்
வாய்ப்புள தமிழில் ஞால
மகிழ்ந் திட எழுதும் வாழ்வை
மாய்த்தனன் கால னந்தோ
மதியினிற் சிறியனம்மா!

— சி. து. க.

நான் யார்?

(கார் வண்ணன்)

காலையில் எழுந்து
கரைந்திடுவேன்
காசினி மக்களை
... எழுப்பிடுவேன்
மாலையில் வந்து
கூடடைவேன்
மக்களை ஊட்டி
வளர்த்திடுவேன்
வாலை ஆட்டிடும்
மாட்டினையே
வருத்தும் தினைவைச்
சொரிந்திடுவேன்
ஆலை மக்கள்
கூறிடுவார்
அறியேன் எருதின்
வருத்தம் என. 1.

தோட்டி வேலை
செய்திடுவேன்
தூக்கம் என்பதை
நானறியேன்
வீட்டில் உள்ள
மக்களுக்கு
விருந்தினர் வருவதை
அறிவிப்பேன்
காட்டில் உள்ள
குயில்களையும்
குஞ்சாய் மதித்துக்
காத்திடுவேன்
கூட்டம் கூட்டி
உண்டிடுவேன்
குவலய ஒற்றுமை
காட்டிடுவேன் 2.

ஆடை அழுக்காய்
அணிந்திட்டால்
அறைவர் என்றன்
வெள்ளை என்றே
பேடை நல்ல
கறுப்பு நிறம்
பெரியன் நானே
சாம்பல் நிறம்
சாடை காட்டுவர்
குழந்தைக்கே
சனியின் வாகனம்
என்றறைவர்
கூடை முறுக்கைக்
கொத்திடுவேன்
கூறிடுவீர் நான்
யார் ஐயா? 3.

Phone: 55034 Tel. Enkaya
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53, கிடங்குத் தெரு., சென்னை 1.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாக்கில் கீழ்க்கண்டபடி வருகிறது.

கழற் கொண்ட சேவடி காணலுற்
றூர்தம்மைப் பேண லுற்றூர்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
வினைநிகர் ஏதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம்
[மேனியெம்
மானைக்கைம் மாமலர் தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்றி
நம்மடுந் தொல்வினையே
—திருவிரட்டை மணிமாலை

சேவடிகளைக் காணலுற்றூர் அவரைப் போற்றுவோர், போற்றுவோர் நிழல் என்று படிப்படியாகக் கீழிறங்கி நிழலைக் கண்ட நல்லோர்க்கு எய்தும் பயனைக் குறித்திருப்பதன் நயத்தினைக் கூர்ந்து நோக்கினல். அடியார்க்குத் தொண்டு பூண்டொழுகுவது ஒன்றே ஆண்டவனிடம் நம்மை அணுக வைக்க வல்லதென்று புலப்படுதல் காணலாம்.

* *

குருகுலச் செய்தி:

மாணவர் இல்லம் உணவகத்திற்கு ஒரு நாள் செலவு ரூ 20-0-0 (சிலர் மேலும்) ஏற்று அன்புடன் உதவியவர்கள்

(இவர்களுக்கு ஓராண்டுக்கு 'முல்லைக் கொடி' தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப் பெறும்.)

முன் வரவு ரூ ... 430—0—0

22. திரு சி. சிவப்பிரகாசம் அவர்கள், 14. அருணாசல முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை-1. 20—0—0
23. திரு டி. ஏ. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். (சுதேசி டைப் பௌண்டரி உரிமையாளர்) 1, ரோஸரி சர்ச் ரோடு, 1-வது சந்து மைலாப்பூர் சென்னை-4. 20—0—0
24. திரு எஸ். பி. மகாதேவன் அவர்கள், 20, குப்பையர் தெரு, பெத்து நாய்க்கன் பேட்டை, சென்னை-1. 20—0—0

ஆக ரூ... 490—0—0

உணவகத்திற்கு நெல் உதவி.

1. திரு வரதா ரெட்டியார் அவர்கள், காட்டரண்பாக்கம், புளிச்சப்பள்ளம் அஞ்சல். (வழி) புதுவை. 2. வண்டி நெல்
2. திரு சி. இராமலிங்கா ரெட்டியார் அவர்கள் காட்டரண்பாக்கம், புளிச்சப்பள்ளம் அஞ்சல். (வழி) புதுவை. 1. வண்டி நெல்
3. திரு எம். கிருஷ்ண ரெட்டியார் அவர்கள், காட்டரண்பாக்கம், புளிச்சப்பள்ளம் அஞ்சல். (வழி) புதுவை. அரை வண்டி நெல்
4. திரு கே. எஸ். ராமமூர்த்தி ரெட்டியார் அவர்கள், காட்டரண்பாக்கம், புளிச்சப்பள்ளம் அஞ்சல். (வழி) புதுவை அரை வண்டி நெல்
5. திரு எஸ். சிவராம் ரெட்டியார் அவர்கள், கொங்கம்பேட், ராம்பாக்கம் அஞ்சல். (வழி) வளவனூர்.

ஆசிரியர் விரிவுரைகள்:

(நடக்க இருப்பன)

சென்னை:

3-2-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-00 மணிக்குச் சென்னை, சென்னமல்லிகேஸ்வரர்கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை

* * * *

''முல்லைக் கொடி'' அன்பர்களுக்கு அறிவிப்பு.

முகவரி மாறுதல்

மாணவர், அன்பர், ஆர்வலர், கையொப்பக்காரர், ஆகிய எல்லாரும் தம் முகவரியில் மாற்றம் ஏற்படும்போது, தாமே குருகுலத் தலைமை நிலையத்திற்கு உடனுக்குடன் எழுதித் தெரிவிக்கவும்.

வேறு காரணங்களால் திரும்பி வரும் இதழ்கள், கூடிய வரையில் அடுத்த இதழோடு சேர்த்து அனுப்பப் பெறுகிறது என்பது அறியவும்.

ஒவ்வொரு வாரமும் இதழை அஞ்சலில் சேர்ப்பிக்கும் முன் எல்லாவற்றையும் பார்த்தே அனுப்பப் பெறுகிறது. ஆகவே அஞ்சலில் கிடைக்காதவர்கள் அடிக்கடி இதழ் கிடைக்கப் பெறவில்லை யென்று எழுதுவதில் பயனில்லை இதழ்களும குறிப்பிட்ட எண்ணிக்கையே அச்சிடுவதால் மேலும் மேலும் பிரதிகள் அனுப்பிவர இயலாமை குறித்து வருந்துகிறோம். இவ்வகையில் வீண் கடிதப் போக்குவரத்துகளையும் தவிர்க்கும்படிக்குக் கேட்டுக் கொள்ளுகிறோம்,

துணைவர், குருகுலம்

ஆர்வலர் சேர்க்கை

ஆண்டுக் காணிக்கை ரூ 5-0-0 செலுத்திக் குருகுலத்தில் ஆர்வலராகச் சேர்ந்துள்ளார் பட்டி. இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப் பெறும்.

சென்னை:	முன் வரவு ரூ...	275
56	அ. சம்பந்தம்	5
57	சி. ஆர். கோவிந்தராஜப்பிள்ளை	5
58	பி. ஜி. பாலகிருஷ்ணன்	5
59	எம். செலபதி ராவ்	5
60	செ. ஜம்புலிங்கம்	5
61	கோ. நா. மார்கபந்து	5
62	க. மாணிக்கவாசகம்	5
63	கே. கந்தசாமி	5
64	எம். வி. ராதாகிருஷ்ணன்	5
65	ஓ. தாமோதரம்	5
66	ஏ. மோகன கிருஷணன்	5
67	வி. எஸ். சிவசங்கரன்	5
68	எஸ். எஸ். சுந்தரம்	5
69	எம். திருவேங்கடம்	5
70	சி. ஆர். ஜெயராமன்	ரூ... 5
71	சி. சம்பந்தமூர்த்தி	5
72	ஏ. கே. கிருஷ்ணமூர்த்தி	5
73	எஸ். எஸ். சுந்தரம்	5
74	சி. எஸ். பாலசுப்பிரமணியம்	5
75	எஸ். நாச்சிமுத்து	5
76	பி. செல்வநாத செட்டியார்	5
சேலம்:		
77	எஸ். ஆர். ஏ. இராமசாமி முதலியார் அண்டு கம்பெனி	5
தஞ்சை:		
78	பி. எஸ். ஈஸ்வர பாகவதர் சன்ஸ்.	5
	ஆக. ரூ	390

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.